கட்டப்பட்டிருந்தன. புரட்சித் தலைவி அம்மாவினுடைய 2001–2006 ஆட்சியில் 761 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினருடைய விடுதிகள் கட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் ஆணை பிறப்பிக்கப் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் 68 சதவீதத்தினராக இருக்கக்கூடிய, நிலையில் அடித்தளத்தில் இருக்கின்ற அத்தகைய பள்ளி மாணவ, மாணவிகள், கல்லூரி மாணவ, மாணவிகளுடைய உணர்வை மதித்து, இன்று மக்களாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற, மனித நேயமிக்க முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தமிழகத்தில், எல்லா விடுதிகளும் அரசு விடுதிகளாக, அத்தனை வசதிகளும் கொண்டதாக இருக்கின்றன என்ற நல்ல செய்தியை அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே..

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்லிவிடுகிறேன். நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன், அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) பேரவை விதி 110–ன்கீழ்... (குறுக்கீடு) துரைமுருகன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். மறுபடியும் கூப்பிடுகிறேன்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 25

ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான பொருளைப் புரிந்துகொண்டு, அப்பாடங்களை நல்லமுறையில் கற்றுத் தேறவும், தமது ஆங்கில மொழி அறிவுக்கு நல்ல அடித்தளம் அமைத்துக்கொள்ளவும் ஏதுவாக, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும், ஆங்கிலம் – ஆங்கிலம் – தமிழ் அகராதி ஒன்றை இலவசமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

மேலும், உலக நாடுகள் பற்றிய தங்களது பூகோள அறிவை விரிவுபடுத்திக்கொள்ளும்வகையில், இந்த மாணவ, மாணவியர் அனைவருக்கும் உலக நாடுகளின் பூகோள வரைபடத் தொகுப்பான Atlas ஒன்றையும் இலவசமாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு அகராதி ஒன்றும், Atlas ஒன்றும் இலவசமாக வழங்கப்படுவதன்மூலம் அரசுக்கு 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். இதனால் ஒரு இலட்சத்து 24 ஆயிரம் மாணவ, மாணவியர் பயன்பெறுவர்.

கல்வித் துறையில் முதன்மை இடத்தில் இருக்கும் தமிழகம், தொடர்ந்து மேம்பாடு காண, இன்று நான் அறிவித்துள்ள அறிவிப்புகள் உறுதுணையாக அமையும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

2. பாலாற்றின் குறுக்கே, குப்பம் பகுதியில் ஆந்திர அரசு அணை கட்டுதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், என்ன?

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதே ஆரம்பித்துவிட்டீர்களா? பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: ஏற்கெனவே இந்த அவையில் விவாதிக்கப்பட்டிருக்கிறது, முதலமைச்சர் அவர்களும் பதில்

2006 ஜனவரி 25] [திரு. துரைமுருகன்]

சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வந்திருக்கிற செய்திகள், பாலாற்றிலே ஆந்திர அரசு அணை கட்டுவது குறித்து, மேலும் பயங்கரமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. திட்டம் தயார், பணம் தயார், ஆரம்பிக்க வேண்டியதுதான் பாக்கி என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் நிறைவேறும் என்று சொன்னால், அதனால் வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்படும். விவசாயிகள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, துரைமுருகன். ஏற்கெனவே இதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) பிரச்சினை என்ன என்பதைப்பற்றிச் சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: அதைத்தான் நான் சொல்கிறேன். இன்றைக்கு அதை நான் சொல்கிறேன் என்றால்.. (குறுக்கீடுகள்) அதற்காகத்தான் அவை இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதைச் சொல்லவேண்டிய முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள், இன்றைக்குப் பேச இருக்கிறீர்கள்!

திரு. துரைமுருகன்: என்ன செய்ய இருக்கிறீர்கள்? முதலமைச்சர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இன்றைக்குப் பேச இருக்கிறீர்கள். சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கல்லே நாட்டப் போகிறார்கள். 15–2–2006...

திரு. துரைமுருகன்: அதைத்தான், அதைத்தான் சொல்கிறேன். ஆகையினாலே, இதுகுறித்து அரசு என்ன நிலைப்பாடு எடுத்திருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: ஒரே நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரே நிமிடம். 15–2–2006...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அவர் இன்றைக்குப் பேச இருக்கிறார். விரிவாகப் பேசுவார். மற்றவற்றை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின்

அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன். (குறுக்கீடு)

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர மாநில அரசு ஓர் அணையைக் கட்டத் திட்டமிட்டுள்ளது என்பதைப்பற்றி இந்த அவையில் பல முறை இந்தக் கூட்டத் தொடரில் பேசிவிட்டோம். இன்று காலையில்கூட இதுசம்பந்தமாக அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் ஆய்வு நடத்திவிட்டுத்தான் இந்த அவைக்கு நான் இப்போது வந்திருக்கிறேன். பாலாற்றின் குறுக்கே, ஆந்திர மாநில அரசு அணை கட்டுவதைத் தடுப்பதற்காக உடனடியாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பிட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவராக நியமித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வணங்கி, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் சமூக நலம் குறித்த முப்பத்து மூன்றாவது அறிக்கையினையும், வனம் குறித்த முப்பத்து நான்காவது அறிக்கையினையும், எரிசக்தித் துறை குறித்த முப்பத்து ஐந்தாவது அறிக்கையினையும் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், முப்பத்து மூன்று முதல் முப்பத்து ஐந்து வரையிலான அறிக்கைகளை அச்சடித்து, பேரவைக்கு அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிபெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.